பாரம் தாங்காமல் இரும்பு பாலம் உடைந்ததால்

# மெட்ரோ சுரங்கப்பாதை பள்ளத்தில் ட்ரெய்லர் லாரி விழுந்து விபத்து

## ● சென்னை சென்ட்ரல் எதிரே போக்குவரத்து பாதிப்பு

■ சென்னை

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை பள்ளத்தின்மீது போடப்பட்டிருந்த இரும்பு பாலம், ட்ரெய்லர் லாரியின் பாரம் தாங்காமல் உடைந்தது. இதனால் லாரி பள்ளத்தில் விழுந்தது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரில் மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதற்காக பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பெரிய பள்ளம் தோண்டப்பட்டுள்ளது. போக்குவரத்து முக்கியத்துவமான சாலை என்பதால், அந்த பள்ளத்தை தடிமனான இரும்பு தகடுகளால் மூடி பாலம் அமைத்து அதன் மீது போக்குவரத்து அனுமதிக்கப் பட்டுள்ளது. இதனால் அனைத்து வாகனங்களும் வழக்கம்போல இயங்கி வந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 1 மணி அளவில் சென்னை துறைமுகத்தில் இருந்து இரும்பு கம்பிகளை ஏற்றிக் கொண்டு ட்ரெய்லர் லாரி ஒன்று பூந்தமல்லி சாலை வழியாக கோயம்பேடு நோக்கிச் சென்றது.

### ஓட்டுநர் உயிர் தப்பினார்

சென்ட்ரல் எதிரே வந்தபோது சுரங்கப்பாதை பள்ளத்தின் மீது போடப்பட்டுள்ள இரும்பு பாலத்தின் தகடுகள், பாரம் தாங்காமல் உடைந்தன. இதனால் சுரங்கப்பாதை பள்ளத்துக்குள் லாரி விழுந்தது. லாரியில் இருந்த இரும்பு கம்பிகளும் பள்ளத்துக்குள் விழுந்தன. லாரியின் பின்பக்கம் முழுவதுமாக பள்ளத்துக்குள் விழுந்து, முன்பகுதி சுமார் 10 அடி மேலே தூக்கியது. இதனால், சுதாரித்துக் கொண்ட லாரி ஓட்டுநர் மேலே இருந்து கீழே குதித்து உயிர் தப்பினார்.

நேற்று முன்தினம் ஆயுதபூஜை என்பதால் சுரங்கம் அமைக்கும் பள்ளத்தில் லாரி விழுந்த நேரத்தில் உள்ளே தொழிலாளிகள் வேலை செய்யவில்லை. இதனால் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. நள்ளிரவில் நடந்ததால், வாகனப் போக்குவரத்து குறைவாக இருந்துள்ளது. இதனால் வேறு வாகனங்களும் விபத்தில் சிக்கவில்லை. பின்னர் பெரிய கிரேன் வாகனம் வரவழைக்கப்பட்டு லாரியும் இரும்பு கம்பிகளும் நேற்று காலையில் மீட்கப்பட்டன.

விபத்து குறித்து மெட்ரோ ரயில் அதிகாரி கூறும்போது, “அதிக எடையுள்ள இரும்பு கம்பிகள் லாரியில் ஏற்றப்பட்டுள்ளதால், பாரம் தாங்காமல் இரும்பு தகடுகள் உடைந்துள்ளன. இவை தற்போது சரி செய்யப்பட்டு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் போக்குவரத்து தொடங்கப்பட்டது” என்றார்.